# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.01.01

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2016

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

<u>வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் நிலையங்கள் **(Extension courses Centre) /** பிரிவுகள் முகாமைத்துவத்திற்கு மற்றும் வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கான செலுத்துகை சதவீதங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டி</u>

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2005.04.26 ஆம் திகதிய 861 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நிலைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற் கொண்டதன் பின்னர் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் பாடநெறிகள் நிலையங்கள் (Extension courses Centre) / பிரிவுகள் (EDP நிலையங்கள் / பிரிவுகள்) முகாமைத்துவத்திற்கு மற்றும் வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கான செலுத்துகை சதவீதங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டிக்கான அங்கீகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வழங்கியுள்ளது. அதற்கமைய, தகவலுக்காக மற்றும் இணக்கப்பாட்டிற்காக இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலை பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களுக்கு வழங்கப்படுகின்றது.

பரீட்சைகள் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கு செலுத்த வேண்டிய உண்மையான கட்டணங்களை, வெளிவாரிப் பட்டத்திற்கான நிலையம் / பிரிவினால் முன்மொழியப்பட்டுள்ள மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதிக் குழு மற்றும் பொது நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. எனவே, எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் மற்றும் (அ) பொது அலுவல்களுக்கான கட்டணங்கள் (ஆ) பயன்பாட்டுக் கட்டணங்கள் (இ) பல்கலைக்கழகம், பீடம், கற்கைப் பிரிவு மற்றும் கற்கை நிலையங்கள் அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்புக்காக ஒதுக்க வேண்டிய கட்டுப்பாட்டு குறைப்புக்களைக் கவனத்திற் கொண்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செலுத்துகைகளுக்கான உச்ச வரையறைகள் , செலுத்த வேண்டிய உண்மையான விகிதங்களைத் தீர்மானிக்கும் வழிகாட்டியாக பயன்படுத்துதல் வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கையின் ஊடாக விதிக்கப்பட்டிருக்கும் பிரகாரம் சுற்றறிக்கையில் பட்டியலிடப்பட்டிருக்கும் சகல சேவைகள் மற்றும் விடயங்களுக்காக செலுத்துவதற்குத் தேவையான நிதியை வெளிவாரிப் பட்டத்திற்கான நிலையம் / பிரிவினால் ஈட்டப்பட்ட நிதியின் ஊடாகப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுடன், இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் விதிக்கப்பட்டிருக்கும் உச்சளவு வரையறை விகிதம் 2016.01.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதுடன், ஏனைய

செலுத்துகைகள் மற்றும் விகிதங்கள் பல்கலைக்கழகம் மற்றும் உலக வங்கியின் 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வித் திட்டத்தின் (WB-HETC) திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு (PPDU) என்பவற்றுக்கிடையிலான HETC திட்டம் - வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளை வழங்குவதற்கான (HETC-EDP) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

2005.04.26 ஆம் திகதிய 861 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/2/3/238(EX)